## யூலை– 02 –பொதுக்கால 13ம் வார ஞாயிறு

### உமது பேரன்பு என்றென்றும் நிலைத்துள்ளது என்று அறிவிப்பேன்: உமது உண்மை வானைப்போல் உறுதியானது. திபா. 89:2

### முதல் வாசகம் :2 அரசர்கள் 4 : 8 – 11

ஒரு நாள் எலிசா சூனேமுக்குச் சென்றார். அங்கேயிருந்த பணக்காரப் பெண் ஒருவர் அவரை உணவருந்தும்படி வற்புறுத்தினார். அதன்பின் அவர் அவ்வழியே சென்ற போதெல்லாம் அங்கே உணவருந்திவிட்டுச் செல்வார்.அவர் தம் கணவனை நோக்கி, ”நம்மிடம் அடிக்கடி வரும் ஆண்டவரின் அடியவர் புனிதர் என்று நான் கருதுகிறேன்.ஆதலால் வீட்டு மேல் தளத்தில் சிறு அறை ஒன்றை அவருக்காகக் கட்டி, அதில் படுக்கை, மேசை, நாற்காலி, விளக்கு முதலியன தயார்படுத்தி வைப்போம். அவர் வரும் பொழுதெல்லாம் அங்கே தங்கிச் செல்லட்டும்” என்றார்.ஒருநாள் எலிசா அங்கு வந்து மாடி அறையில் தங்கி ஓய்வுஎடுத்துக் கொண்டிருந்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவரின் பேரன்பைப்பற்றி நான் என்றும பாடுவேன்

### இரண்டாம் வாசகம் : உரோமையர் 6 : 3 – 4, 8 -11

சகோதர சகோதரிகயே! திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம் அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியாதா?இறந்த கிறிஸ்துவை மாட்சிமிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம். கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை.இறந்து உயிருடன் எழுப்பபட்ட கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார் இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்ல என நாம் அறிந்திருக்கிறோம்.அவர் இறந்தார் பாவத்தை ஒழிக்க ஒரே ஒருமுறை இறந்தார். இப்போது அவர் வாழ்கிறார் அவர் கடவுளுக்காகவே வாழ்கிறார்.அவ்வாறே, நீங்களும் பாவ வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் இறந்தவர்கள் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து கடவுளுக்காக வாழ்கிறவர்கள் என்பதை எண்ணிக் கொள்ளுங்கள்.

### நற்செய்தி : மத்தேயு 10 : 37 - 42

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது: ”என்னைவிடத் தம் தந்தையிடமோ தாயிடமோ மிகுந்த அன்பு கொண்டுள்ளோர் என்னுடையோர் என கருதப்படத் தகுதியற்றோர். என்னைவிடத் தம்மகனிடமோ மகளிடமோ மிகுதியாய் அன்பு கொண்டுள்ளோரும் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்.தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்.தம் உயிரைக் காக்க விரும்புவோர் அதை இழந்து விடுவர். என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரோ அதைக் காத்துக் கொள்வர்.”உங்களை ஏற்றுக்கொள்பவர் என்னை ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக்கொள்பவரோ என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்கிறார்.இறைவாக்கினர் ஒருவரை அவர் இறைவாக்கினர் என்பதால் ஏற்றுக்கொள்பவர் இறைவாக்கினருக்குரிய கைம்மாறு பெறுவார். நேர்மையாளர் ஒருவரை அவர் நேர்மையாளர் என்பதால் ஏற்றுக்கொள்பவர் நேர்மையாளருக்குரிய கைம்மாறு பெறுவார்.இச்சிறியோருள் ஒருவருக்கு அவர் என்சீடர் என்பதால் ஒருகிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவரும் தம் கைம்மாறு பெறாமல் போகார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார்.

**தியானம்:** இயேசுவைப் பின் செல்ல விரும்புவோர் தீர்க்கமான முடிவெடுத்து, அவரைப் பின் தொடர வேண்டும் என்று நற்செய்தி தெரிவிக்கின்றது. இயேசுவின் பொருட்டுத் துன்பங்களை ஏற்கவும் தயங்காது, தம்முயிரையே இயேசுவுக்காகக் காணிக்கை யாக்குவோர் உண்மையில் “அதைக் காத்துக்கொள்வர்“ என இயேசு கூறுவது எமது அற்ப அறிவுக்கு முரண் பாடாகப்படலாம். இறையனுபவம் எனப்படுவது எமது அறிவால் அல்ல மாறாக, உள்ளத்தின் ஆழத்தில் எழும்புகின்ற விசுவாச உணர்வால் கட்டி எழுப்பப்பட வேண்டு மெனவும் நற்செய்தி வேறுவிதமாகப் போதிக்கின்றது. இவ்வுலகில் எதுவுமே நிரந்தரமில்லை. எமது உயிர் ஒருநாள் நம்மை விட்டுப் பிரிந்துவிடும். ஆனால், மனித வாழ்வு இவ்வுலகத்தோடு முடிவதல்ல. மாறாக இமனிதவாழ்வின் நிறைவு மண்ணக வாழ்வைத் தாண்டி நிலையான வாழ்வைப் பெற வேண்டும் என்னும் ஏக்கம் எமதுள்ளத்தில் எப்போதும் இருக்கவேண்டும். அந்த நிலையான வாழ்வு ஒரு போதும் அழியாத ஒன்றாக இருக்கும் என இயேசு நமக்கு வாக்களிக்கிறார். இவ்வுலகில் நிலையானதென நாம் நினைப்பது உண்மையிலேயே நிலையற்றது. நாம் மறுவுலக வாழ்வு நமக்கு உண்டு என்னும் நினைப்பில் இவ்வுலகவாழ்வை வெறுக்க வேண்டும் என இயேசு கேட்கவில்லை. மாறாக, இவ்வுலக வாழ்வு கடவுள் நமக்கு அளிக்கின்ற கொடை எனப்படுகின்றது. ஆனால், இவ்வுலகம் நம் இதயத்தில் கடவுளின் இடத்தைப் பிடிக்கக்கூடாது. உண்மையான கடவுளை நாம் மறந்து மனம் போன போக்கில் நம் வாழ்வை அமைத்துக் கொள்ள விரும்பினால் நம் உள்ளத்தில் அமைதி தோன்றாது. எனவே, இயேசுவின் பொருட்டு நாம் எல்லாவற்றையும் இழக்கத் தயாராகவேண்டும். அப்போது நம் வாழ்வின் நிறைவைக் கண்டு கொள்வோம். இதுவே நம் ஆன்ம வேட்கையைத் தணிக்கின்ற நீரூற்றாக நம்மில் வந்து பாய்ந்து வழிந்தோடும். அப்போது நாம் எதற்குமே கலங்காமல் உள்ளத்தில் அமைதி காண்போம். இயேசுவின் உண்மைச் சீடர்களாவோம். அதன் வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்.